## இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு

### துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமானசேவைகள் அமைச்சு

### வணிகக் கப்பற்றுறை செயலகம்

## “இலங்கைக் கொடியின் கீழ் கப்பல்களைப் பதிவு செய்வதனை விளம்பரப்படுத்துவதற்கு” ஆர்வமுள்ள உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள் அல்லது தனிநபர்களிடமிருந்து

## ஆர்வ வெளிப்பாட்டுக்கான கோரல் (EOI)

**குறிப்பு இல: MSS/ACC/01/27-01**

துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமானசேவைகள் அமைச்சிடமிருந்து ‘‘இலங்கைக் கொடியின் கீழ் கப்பல்களைப் பதிவு செய்வதனை விளம்பரப்படுத்துவதற்கு’’ ஆர்வமுள்ள உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள் அல்லது தனிநபர்களிடமிருந்து ஆர்வ வெளிப்பாடுகள் கோருகின்றன.

**1. நோக்கம்**

இலங்கைக் கொடியின் கீழ் கப்பல்களைப் பதிவு செய்வதனை விளம்பரப்படுத்துவதற்கு இலங்கை மற்றும் வெளிநாடுகளிலுள்ள நிறுவனங்கள் அல்லது தனிநபர்களை அடையாளங் காணல்.

**2. தகமை**

**2.1** தகமை பெறக்கூடிய நிறுவனங்கள் அல்லது தனிநபர்கள்,

2.1.1 கப்பல் பதிவு தொடர்பான வியாபாரங்களை மேற்கொள்வதற்காக அவர்கள் தமது சொந்த நாட்டு சட்டத்தின் கீழ் பதிவ செய்திருத்தல் வேண்டும்.

2.1.2 உரிய துறையில் சுய அனுபவ வெளிப்பாட்டினை வழங்குவதற்கு இயலுமானதாக இருத்தல் வேண்டும், **அல்லது**

2.1.3 இலங்கைக் கொடியின் கீழ் கப்பல்களைப் பதிவுசெய்வதற்காக விளம்பரப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் கால எல்லையினுள் முன்மொழிவு/செயற்றிட்டத்தினைச் சமர்ப்பிக்க இயலுமானதாக இருத்தல் வேண்டும்.

3. **தகுதிபெறும் நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களுக்கான நன்மைகள்:**

   1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க வணிகக் கப்பற் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவும் வணிகக் கப்பற்றுறைச் செயலகத்துடன் வெற்றிகரமான நிறவனங்கள் அல்லது தனிநபர்களிடையே கையெழுத்திடப்பட்ட MOU இலுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கமைவாகவும், கப்பல்களை வெற்றிகரமாகப் பதிவுசெய்வதுடன் கொடியை விளம்பரப்படுத்துவதில் வெற்றி பெறும் நிறுவனங்களுக்கு அல்லது தனிநபர்களுக்கு இலங்கை அரசாங்கத்திடமிருந்து கவர்ச்சிகரமான நிதிக் கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

4. **ஆர்வ வெளிப்பாட்டுக்கான ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளல்**

   ஆர்வ வெளிப்பாட்டுக்கான ஆவணங்களை http://www.portmin.gov.lk எனும் அமைச்சின் இணையத்தளத்திலிருந்தோ அல்லது http://www.dgshipping.gov.lk எனும் வணிகக் கப்பற்றுறைச் செயலகத்தின் இணையத்தளத்திலோ பதிவிறக்கம் செய்துகொள்ள முடியும்.

5. **ஆர்வ வெளிப்பாட்டினை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி:**
   பூரணப்படுத்தப்பட்டு முத்திரையிடப்பட்ட ஆர்வ வெளிப்பாடுகள் இந்த ஆர்வ வெளிப்பாட்டிலே விபரிக்கப்பட்டுள்ள முறையிலும் வடிவிலும் கீழே தரப்பட்டுள்ள முகவரிக்கு 08 ஆம் திகதி ஜீலை மாதம் 2024 அன்று 14.00 மணிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

   ஆர்வ வெளிப்பாடுகள், இல 19, சைத்திய வீதி, கொழும்பு 01, இலங்கை எனும் முகவரியில் அமைந்துள்ள, துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமானசேவைகள் அமைச்சில் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழுவினால் திறக்கப்பட்டு மதிப்பிடப்படும்.

   **ஆர்வ வெளிப்பாட்டினை சமர்ப்பிப்பதற்கான முகவரி**
   தலைவர்,
   அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழு,
   துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமானசேவைகள் அமைச்சு,
   இல 19, சைத்திய வீதி,
   கொழும்பு 01,
   இலங்கை.